பத்திரிகை: வீட்டு

Registered as a Newspaper

... நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளநூலகம்.

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 12 ஞாயிற்றுக்கிழமை (23-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 88

# வவுனியா - மன்னார் தரைப்பாதை; படையினர் பிடித்ததாக அறிவிப்பு!

## முச்சந்தி முரளி



அப்ப உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும் எண்டு சொல்லுங்கோ......!

## வரலாற்று வெற்றி என்கிறார் அனுருத்த

கொழும்பு, பெப்ரவரி 23

'எடிபல' படையினர் வவுனியா -- மன்னார் தரை வழிப்பாதையை முழுதாகக் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு வரலாற்று ரீதியான வெற்றி என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று மாலை தள்ளாடி இராணுவ முகாமில் தெரிவித்தார். தரைவழிப் பாதை திறக்கப்பட்டிருப்பதால் மன்னாருக்கான கடல்மார்க்கப் போக்குவரத்து தடை செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

சுதந்திர தினமான கடந்த 4 ஆம் திகதி 'எடிபல' இராணுவ நடவடிக்கை வவுனியாவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த இராணுவ நடவடிக்கை இரு கட்டங்களாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருடன் தரை இறங்கிய விமானம் திரும்பிச்செல்ல ஒல்லாந்துஅனுமதி

அம்ஸ்ரடாம், பெப். 23

173 இலங்கையர்களுடன் அம்ஸ்ரடாமில் அனுமதியின்றித் தரையிறங்கிய தக்மனிஷ்தான் விமான சேவை விமானத்தை அபராதம் எதுவும் இன்றி அங்கிருந்து வெளியேற ஒல்லாந்து அரசு அனுமதித்துள்ளது.

கடந்த ஞாயிறன்று சிப்போல் விமானத் தளத்தில் தரையிறங்கிய இந்த விமானத்தில் இருந்த பயணிகள் ''வீஸா'' வைத்திருக்காத தமிழர்கள் என்பது தெரிய வந்ததால் விமானம் அங்கிருந்து புறப்பட அனுமதிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டது.

தற்போது இந்த விமானம் திரும்பிச் செல்ல அதிகாரிகள் அனுமதித்துள்ளனர். எனினும் மறு அறிவித்தல் வரை தக்மனிஷ்தான் விமானங்கள் ஒல்லாந்தில் தரையிறங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டா என்று ஒல்லாந்து நாட்டு போக்குவரத்து அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த தக்மினிஷ்தான் அதிகாரிகள் எதிர்காலத்தில் இது போன்ற நடவடிக்கைகள் இடம் பெறாது என்றும் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

## முகாம் தாக்குதல்

முல்லைத்தீவுக் காடுகளிடையேயுள்ள புலிகளின் 14 ஆம் இலக்க முகாம் கடந்த வெள்ளிக்கிழமை விமானத் தாக்குதலுக்கு இலக்கானதாக விமானப்படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார்.

படையினர் தற்போதுமேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக மடுக்காட்டில் சிக்கியுள்ள புலிகளுக்கு உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

## தனியாரிடம் கப்பல் சேவை

கொழும்பு, பெப். 23

வடபகுதிக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்துக்குத் தனியார் கப்பல் சேவையைப் பெறுவது குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் தனியார் கப்பல் சேவையை ஈடுபடுத்தும் போது பயணிகள் போக்குவரத்துக் கட்டணம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் போக்குவரத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிடித்த பாதையைப்பாதுகாப்பது தற்போதுள்ள அடிப்படைபிரச்சினை

### ராணுவ ஆய்வாளர் தெரிவிப்பு

''வவுனியாவிலிருந்து மன்னார் வரையிலான 'எடிபல' இராணுவ நடவடிக்கை இலகுவாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தரைவழிப் பாதை கைப்பற்றப்பட்ட போது எவரும் எதிர்பார்க்காத விதத்தில் புலிகள் தாக்குதல் எதனையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் இந்தப் பாதையைப் பாதுகாப்பது தான் தற்பொழுதுள்ள அடிப்படைப் பிரச்சினை.''

வவுனியா -மன்னார் தரைவழிப்பாதை பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டது குறித்து இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பி. பி. ஸியின் சிங்களச் சேவைக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் வவுனியா - மன்னார் தரைவழிப் பாதை அமைந்த பிரதேசம் யுத்த ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. முல்லைத்தீவில் இருந்து வவுனியா வரையான பகுதியே

(8 ஆம் பக்கம் பார்கக)

## நேற்று துக்கம் அனுஷ்டிப்பு

கொழும்பு, பெப். 23

மன்னாரிலிருந்து தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அகதிகள் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில்நேற்றுதுக்க நாள் அநுட்டிக்கப்பட்டதாக ஏ. எப். பி. செய்தியாளர் பி. பி. சி. சிங்களச் சேவைக்குத் தெரிவித்தார்.

அந்தப்பகுதிகளில் உள்ள கடைகள் பூட்டப்பட்டன என்றும் —

வீடுகளில் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன என்றும் —

போக்கு வரத்து நிறுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

'' முதலில் கிடைத்த தகவல்களின் படி அகதிகளை ஏற்றிச் சென்ற ஒரு படகே கடலில் மூழ்கியது. ஆனால் வவுனியாவில் இருந்து வந்தவர்களின் தகவல்களின் படி இரண்டு படகுகள் கடலில் மூழ்கியுள்ளன '' எனவும் ஏ. எப். சி. செய்தியாளர் தெரிவித்தார்.

இந்த விபத்தில் 130 பேர் வரை உயிரிழந்தது தெரிந்ததே. (இ-10)

## கிழக்கு முஸ்லிம் பிரமுகர்கள் புலிகளைச் சந்திக்க முயற்சி

### செஞ். உதவியை கேட்கின்றனர்

கொழும்பு,பெப். 23

கிழக்கில் தமிழர்—முஸ்லிம் உறவுகளில் ஏற்பட்டுள்ள சீரழிவை நீக்கி சுமுக நிலையை ஏற்படுத்துவது குறித்து நேரில் பேசி ஆராய்வதற்கு கிழக்கில் உள்ள முஸ்லிம் பிரமுகர்களின் குழு ஒன்று விரைவில் கிழக்கில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்கவிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு, ஓட்டமாவடி, ஏறாவூர் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள் இனி மேலும் இடம்பெறாமல் தடுப்பது குறித்து முஸ்லிம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 23

மன்னார் நாச்சிக்குடாவிலிருந்து இராமேஸ்ரம் நோக்கி படகில் பயணம் செய்கையில் மரணித்த தமிழ் மக்கள் 130 பேருக்கும் கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்து ஈ. பி. டி. பி. இயக்கமும், ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கமும் தனித்தனியாக இரு அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. (உ)

# புலிகளின் அரசியல் நடவடிக்கைக்கு 'ஐக்கிய தமிழர் கூட்டு முன்னணி'

### கொழும்பு வார இதழ் தகவல்

கொழும்பு, பெப். 23

ஐரிஷ் விடுதலை முன்னணி தனது அரசியல் நடவடிக்கைகளுக்கு என 'சின் பின்' என்ற அமைப்பைச் செயற்படுத்துவது போல —

தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு என புதிய அரசியல் கூட்டு முன்னணியாக 'ஐக்கிய தமிழர் கூட்டு முன்னணி' (United Tamil Allaiance) என்ற அமைப்பைத் தோற்றுவித்திருக்கின்றார்கள் என்று கொழும்பில் இருந்து வெளியாகும் தமிழ் வார இதழ் ஒன்று தெரிவித்திருக்கின்றது.

தமிழர் உரிமைகளை உறுதியாக நிலைநாட்டவும், அதற்கான அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவும் இந்த அமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கியுள்ளனர்.

இந்த கூட்டு முன்னணியில் பல தமிழ் தீவிரவாத மாவோ சிந்தனையாளர்கள் முக்கிய பங்கு கொண்டு இயங்கவுள்ளனர் என்றும் —

தென்னிலங்கையின் தீவிரவாத இடதுசாரி இயக்கங்களின் ஆதரவும் அதற்கு உள்ளதாகவும் அறிய வருகின்றது.

புலிகள் அமைத்துள்ள புதிய கூட்டு முன்னணி குறித்துமேலும் பல தகவல்களைத் திரட்டுவதில் தேசிய புலனாய்வுப் பணியகம் ஈடுபட்டிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளின் மேற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## க. இ. ஆறுமுகம் (பண்ணாகம்)
**(பிரபல தரகர், புறக்கோட்டை கொழும்பு)**

பண்ணாகத்தைச் சேர்ந்த க. இ. ஆறுமுகம் அவர்கள் 21 - 02 - 97 இல் காலமானார்.

அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும், கதிரமலைநாதன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர் — பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), பத்மநாதன் (டென்மார்க்), கணேசலிங்கம் (டென்மார்க்), ஜெயபாலன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி புவனஜோதி (சங்கானை பலநோ. கூட்டுறவுச் சங்கம்), திருமதி சந்திராதேவி (டென்மார்க்), திருமதி லிங்கேஸ்வரி (டென்மார்க்), திருமதி ஜெயராணி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யசோதா, நித்தியானந்தன், கணபதிஆனந்தன், நிஷாந்தன், விஜிதா, அனிதா, ஜெயன், ஜெனன் ஆகியோரின் அன்புப் பேரனும், சின்னத்துரை, அமரர் செல்லத்துரை, அமரர் திருமதி பொன்னம்மா, திருமதி சரஸ்வதி, திருமதி முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சண்முகலிங்கம், அமரர் சுப்பிரமணியம், பொன்னுத்துரை (C. T. B. சாரதி), திருமதி செல்லக்கண்டு ஆகியோரின் மைத்துனரும், சி. லோகநாதனின் (C. T. B. சாரதி) பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று 23-02-97 காலை 10-00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. கதிரமலைநாதன்
(மகன்)

பண்ணாகம்,
சுழிபுரம்.
(9312)

## திருமதி இராசமணி கந்தையா

கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி இராசமணி கந்தையா கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி நாகலிங்கத்தின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான திரு. திருமதி வேலுப்பிள்ளையின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சிறிதரன், காலஞ்சென்ற ஜெயதரன், மகேந்திரன் (ஜேர்மனி) காலஞ்சென்ற புஷ்பராணி, சிறிமதி (லண்டன்), மனோகரன் (ஜேர்மனி), பாஸ்கரன் (ஹொலண்ட்), தயாபரன் (லண்டன்), ரேணுகா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிறிபத்மநாதன் (சிறிபத்மநாதன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சற்குணராசா (லண்டன்) சிறினிவாசன் (அமெரிக்கா), சரஸ்வதி தேவி, வடிவாம்பிகை, கலாவதிதேவி (ஜேர்மனி) வசந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கிளிநொச்சியில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சிறிபத்மநாதன்
(மருமகன்)

இல. 5 முஸ்லிம் கல்லூரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(9309)

## கதிரவேலு சண்முகநாதன்
(ஓய்வு பெற்ற நெசவு மேற்பார்வையாளர்)

உடுவிலைச் சேர்ந்த கதிரவேலு சண்முகநாதன் 21-2-97 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்தார்.

இவர் சரஸ்வதியின் (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை) அன்புக் கணவரும்,பங்கயச்செல்வி, தயாநிதிதேவி (ஆசிரியை, மயிலணி), ரதிதேவி (லண்டன்), கிருபாதேவி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நந்தகுமார் (சவூதி), சத்தியசீலன் (உதவித் தபாலதிபர், யாழ்ப்பாணம்), கெங்கேஸ்வரன் (லண்டன்), புலேந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்தனா, சோபனா சோபிகா, மாதுளன், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 22-2-97 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
(சி/186) ந. சத்தியசீலன்

## திருமதி ஈனிட் சமாதானராணி ஆனல்ட்

திருமதி ஈனிட் சமாதானராணி ஆனல்ட் காலமானார். இவர் காலஞ்சென்ற அருட்திரு J. V. J. ஆனல்ட் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயராணி, காலஞ்சென்ற ராஜன் ஆனல்ட், பாலன் ஆனல்ட், சுந்தரராணி, Dr. கிருபா ஆனல்ட், சந்திரவதனா, அருட்திரு சந்திரன் ஆனல்ட் ஆகியோரின் அன்புத் தாயாரும், யே. லைமன், பத்மினி, விமலா, L.T. சோமநாதர், Dr. ரஞ்சனா, அருட்திரு சத்தியன், கதிர்காமர், மனோகரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

பூதவுடல் 23-02-97 மதியம் 12.00 (பழைய நேரம்) மணியளவில் மானிப்பாய் C. S. I. ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெறும்.

தகவல்;
அருட்திரு சந்திரன் ஆனல்ட்
(மகன்) (9310)

மானிப்பாய்.

## உள்ளூரில் மீன் விற்க அறிவுறுத்து

நெடுந்தீவு, பெப். 23

ஊர்காவற்றுறை வேலணைப்பகுதியில் உள்ள பாவனையாளர்களுக்குத் தேவையான மீனை விற்பனை செய்த பின்னரே மீனவர்கள் வியாபாரிகளுக்கு மீனை வழங்கவேண்டும் என ஊர்காவற்றுறை குடிசார் இணைப்பதிகாரி மீனவர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

யாழ். நகரில் கூடுதல் விலைக்கு விற்கமுடியும் என்பதால் மீனவர்கள் உள்ளூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவதில்லை என்பதும் —

இதனாலேயே மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதும் — குறிப்பிடத்தக்கது. (இ-111)

## மின்சாரக் கட்டணம்

குருநகர், பெப். 23

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் பாவிப்போருக்கு மின் கட்டணத்தை செலுத்துவதற்கான மின்சாரப் பட்டியல் இலங்கை மின்சார சபை யாழ். கிளையினால் ஒவ்வொரு மின் பாவனையாளருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

14-01-97 இல் இருந்து 10 - 02 - 97 வரைக்கான காலப் பகுதியில் பாவித்த மின் கூறுகளின் படி உரிய கொடுப்பனவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இதற்கான கொடுப்பனவுகளைகா சாகவோகாசோலையாகவோ 30 நாட்களுக்குள் செலுத்துமாறும் தவறின் மின் விநியோகம் துண்டிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

ஸ்ருடியோ
வேலைபழகுதல்
ஆண், பெண் இருபாலாரும்
கடித மூலம்
விண்ணப்பிக்கலாம்.
தராதரத்தையும் குடும்ப நிலைமைகளையும் அறியத்தருக.
ந. இராசரெட்ணம்
அம்மன் கோயிலடி
டச்சுறோட் - கோப்பாய்.
(45456)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

சுன்னாகத்தைத் தனது பிறப்பிடமாகவும், கந்தரோடையை தன் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி ஆறுமுகம் 21 - 02 - 97 இல் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற ஆசிரியமணி க. ஆறுமுகம் (இளைப்பாறிய அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கனிஷ்டபிரிவு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னவர் - தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற குமாரசாமி (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் - வலி தெற்கு), திருமதி கமலாம்பிகை (மலேசியா) ஆகியோரின் சகோதரியும், புனிதவதி, கார்த்திகேசர் (ஆர்தன்ஸ், நெல்லியடி – முன்னாள் இ. போ. ச.), திலகவதி, புஸ்பவதி, குணவதி (யாழ். போதனா வைத்தியசாலை), இமாவதி ( தெ. ப. பொ. அபி. சபை ), கமலவதி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பரமானந்தம் (இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (கட்டடத்திணைக்களம்), வாரித்தம்பி (புகையிரதத் திணைக்களம்), பூலோகநாதன் (இ. போ. ச, காரைநகர்), பரந்தாமன், ரஞ்சன் (பாபு) (டென்மார்க்), ஆகியோரின் அன்பு மாமியாரும், உதயணன் (ஜேர்மனி), மீரா ( சப்பிரகமுவ பல்கலைக்கழகம் ), பிரதீபன் (பொறியியல் பீடம், பேராதனை), பிருந்தா, துசிலை, காயத்திரி, மகிந்தன், நிசாந் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), அனுராஜ், பிரியந்திரி (தமிழ் கந்தையா வித்தியாசாலை), கார்த்திகா, கௌரி (விக்கினேஸ்வராக் கல்லூரி), அபிராமி (மெதடிஸ் கல்லூரி), ஆர்தன்ஸ் (ஹாட்லிக் கல்லூரி , சத்தியேந்திரா ( கொழும்பு ), அஜயந்தன், கஸ்தூரன், சுபாங்கன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-02-97 இல் கந்தரோடையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. கார்த்திகேசர்
(மகன்)

'மங்களபவான்'
கந்தரோடை,
சுன்னாகம்.
(45439)

## வெற்றிவேலு உருத்திரசிங்கம்
**(பெரிய தம்பி)**

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வெற்றிவேலு உருத்திரசிங்கம் 17 - 2 – 97 இல் கனடாவில் அகால மரணமடைந்தார்.

இவர் வெற்றிவேலு சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், சந்திரமாலாவின் (கனடா) அன்புக் கணவரும், செல்லத்துரை செல்வமணி ஆகியோரின் சிரேஷ்ட மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23-2–97 இன்று கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்லத்துரை (துரை)
(மாமன்)

102, கண்டி றோட்,
கச்சேரியடி,
அரியாலை.
(45444)

அன்பர்கள், ஆதரவாளர்களே!
மீண்டும் வந்துவிட்டது!!
நாடுங்கள்: நியூ விமாகி

1. DULUX இனாமல் பெயின்ற் வகைகள்
2. DULUX எமல்சன் பெயின்ற்
3. DUCO ஸ்பிறே பெயின்ற்
4. கிறீஸ் 18 கி
5. ஸ்கொட்டிங்பான் - L ★ லினோலியம் சீற்
6. ஸ்கொட்டிங்பான் - S ★ போ(F)மிக்காசீற் 8X4
7. K. சிங் மாபிள் ★ காட்போட் சீற் 8X4
8. L. சிங் மாபிள் ★ ரெக்சின்
9. கொமேட் ★ கம்பி $\frac{3}{8}$" 3 நூல்
10. S. பைப் 4" ★ கம்பி $\frac{1}{2}$"
11. S. பைப் 400G ★ G.I சீற் 18G 8X4
12. S. பைப் 600G ★ B.I சீற் 18G 8X4
13. $\frac{1}{2}$" பிராஸ் TAP ★ யன்னல் கண்ணாடி $\frac{1}{2}$ நூல் 3'2'
14. $\frac{3}{4}$" பிராஸ் TAP ★ யன்னல் கண்ணாடி 1நூல் 6' 4'
15. $\frac{1}{2}$" BASIN TAP ★ சிவப்பு, கறுப்புகாவி (கொலன்ட்)

C. I. C. நிறுவனத்தின் ஏகவிநியோகஸ்தர்கள் ஆகிய எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நியூ விமாகி
27/5 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (45457)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்,

### பெரு பணயக் கைதிகள் விவகாரம்

# அரசு - போராளிகள் சந்தித்து பேச்சு; லீமா நகர் முழுவதும் நெருக்கடி நிலை

லீமா, பெப். 23

பெரு நாட்டின் தலைநகர் லீமா முழுவதிலும் நெருக்கடி நிலைய அந்நாட்டு அரசு பிரகடனம் செய்துள்ளது.

லீமாவில் உள்ள ஜப்பானியத் தூதரின் இல்லத்தில் 72 பணயக்கைதிகளை இடதுசாரிப் போராளிகள் தடுத்து வைத்திருப்பதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நீடித்து வருகிறது.

ஜப்பானியத் தூதரின் இல்லத்தைச் சூழவுள்ள பகுதிகளில் அமுலில் உள்ள நெருக்கடிநிலை மேலும் 60 நாள்களுக்கு நீடிக்கப்பட்டிருப்பதுடன் லீமாவின் எல்லா 12 மாவட்டங்களிலும் நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதாக பெரு அரசு அறிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு- மேலாகத் தொடரும் பணயக் கைதிகள் விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக ''துப்பக் அமாறு'' போராளிகள்குழுத் தலைவர் செபாக் பெரு அரச பிரதிநிதிகளை முதன்முறையாகச் சந்தித்து மூன்று மணிநேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

இருதரப்பினரிடையேயும் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் கத்தோலிக்க பேராயர் யுவான் லூயிஸ் ஈடுபட்டிருக்கிறார்.

கருத்து வேறுபாட்டுக்கு காரணமாக இருக்கும் முக்கிய விடயங்கள் பேச்சுக்களின் போது ஆராயப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். (ஐ-10)

### செய்யாத குற்றத்துக்கு தண்டனை

தாங்கள் செய்யாத கொலைக் குற்றத்திற்காக 18 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த மூன்று பிரிட்டிஷ் பிரஜைகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

18 ஆண்டுகள் நடத்தப்பட்ட வழக்கின் முடிவில் குற்றமற்றவர்கள் என நிரூபிக்கப்பட்ட இம் மூவரும் கடந்த வெள்ளியன்று லண்டனில் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட இந்த அப்பாவிகளை லண்டன் நகரவாசிகள் தெருக்களில் கூடி நின்று கட்டியணைத்து வரவேற்றனர். (ஐ-10)

### ஏவுகணைகள் விவகாரம்:

## ஈராக் துணைப் பிரதமர் ஐ. நா. அதிகாரியால் விசாரணை

நியுயோர்க், பெப். 23

ஐ. நாவின் ஆயுதக் குறைப்புத்துறை அதிகாரி றோல்ட் எத்தையுஸ் ஈராக் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ் அவர்களை கடந்த வெள்ளியன்று சந்தித்து ஈராக் மறைத்து வைத்திருப்பதாகக் கருதப்படும் ஏவுகணைகளைப்பற்றித்துருவித் துருவி விசாரித்தார்.

கடந்த வாரத்தில் மாத்திரம் அவர் மூன்று முறை ஈராக் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

ஏவுகணை பற்றி வேண்டும் என்றே தேவையற்ற அவப்பெயர்களை கிளப்பிவிடும் அமெரிக்காவின் கைக்கூலியாக ஐ. நாவின் அதிகாரி மாறிவிட்டார் என்று ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கிடையில் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஈராக்கில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டுப் பிரச்சினை குறித்து அவசர ஆலோசனை நடத்தியுள்ளனர். (ஐ-10)

## உலக அரங்கில்

### ஈரானில் குஜ்ரால்

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் ஈரானுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஈரானிய வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஈரானிய அதிகாரிகளுடன் ஆப்கானிஸ்தான் நிலைவரம் குறித்து குஜ்ரால் பேச்சு நடத்தியுள்ளார்.

### வடகொரிய

## பாதுகாப்பு அமைச்சர் மாரடைப்பால் மரணம்

பியோங் யாங், பெப். 23

வடகொரியாவின் மூத்த தலைவரும், பாதுகாப்பு அமைச்சருமான மார்ஷல் ஷே குவாங் தனது 78 ஆவது வயதில் மாரடைப்பினால் காலமானார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரதமருக்கு அடுத்தபடியாக அதிகாரம் மிக்கவராக விளங்கிய குவாங்கின் திடீர் மரணம் வடகொரிய ஆட்சிப் பீடத்தில் அதிர்ச்சியையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது.

வடகொரியாவின் கம்யூனிஸப் பிடியில் இருந்து தப்பி சீனாவில் உள்ள தென்கொரியத் தூதரகத்தில் வடகொரிய அதிகாரி ஒருவர் தஞ்சமடைந்ததைத் தொடர்ந்து கொரியத் தீவகற்பத்தில் பதற்றம் நீடித்துவருகிறது.

இந் நிலையில் பாதுகாப்பு அமைச்சரின் மறைவுச் செய்தியும் வெளியாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சரின் மரணச் செய்தியைஜப்பானிய செய்தி நிறுவனமே முதலில் வெளியிட்டது. (ஐ-10)

# ஊடுருவும் அளவுக்கு பெரும் ஆபத்துக்களை வன்னிக் காட்டில் படைகள் சந்திக்க நேரிடும்

## அரசியல் ரீதியான இந்த தற்காப்பு யுத்தத்தில் அரசுக்கு தற்காலிக வெற்றி கிடைக்கலாம்

வடபகுதியில் தரைப் பாதை திறப்பதற்கான நடவடிக்கை என்று தனது புதிய நடவடிக்கைக்கு அரசாங்கம் விளக்கம் சொல்கிறது,

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வெற்றிப்பாதையை திறப்பதற்கான நடவடிக்கை தான் '' எடிபல'' என்பது வெளிப்படையான விஷயம்.

அதனால் '' ஒப்பரேஷன் எடிபல'' வுக்கு '' ஒப்பரேஷன் எலக்ஷன் றூட்'' என்பதுதான் பொருத்தமான பெயராக இருக்கும்.

உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறை இரண்டு துருப்புச் சீட்டுக்களை இறக்கியுள்ளது ஆளும்தரப்பு.

ஒன்று: விஜயகுமர துங்க கொலை தொடர்பான ஜனாதிபதி கமிஷன் அறிக்கை. உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி கமிஷன் அறிக்கை வெளிவரக் கூடியதாக செய்யப்பட்டது நல்லதொரு பிரசார தந்திரம்.

இரண்டாவது: வடக்கில் புலிகளுக் கெதிரான இராணுவ நடவடிக்கை.

உள்ளூராட்சித் தேர்தல் பிரசார மேடைகளில் சுட்டிக் காட்டிப் பேசக்கூடியளவுக்கு தேர்தல் காலகட்டம் முழுக்க போர்க்களத்தில் சண்டைக் காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருக்கும். புலிகளின் கட்டுப்பாட்டில் மீதியாக உள்ள சொற்ப பகுதிகளையும் விரைவில் மீட்டு விடுவோம் என்று ஜனாதிபதி தென்னிலங்கை வாக்காளர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

உண்மையில் வடக்கு - கிழக்கில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைவிட புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளும், மக்கள் தொகையும் அளவிலும், எண்ணிக்கையிலும் அதிகமாக உள்ளது. யாழ். குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னரும்கூட வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் பாரிய நிலப்பரப்பும், மக்களும் இருக்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். குடாநாடு உட்பட ஏனைய பகுதிகளிலும் புலிகள் நிலைகொண்டுள்ளனர்.

ஆனால் ஒரு குறுகிய நிலப் பரப்புக்குள் புலிகளை அடித்துத் தள்ளி முடக்கி வைத்திருப்பது போலவும், அங்கிருந்தும் விரைவாக வெளியேற்றி விடலாம் என்பது போலவும் தென்னிலங்கை மக்களுக்கு அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கிறது.

### இலகுவில் முடியக்கூடிய யுத்தமல்ல

வன்னி யுத்தம் என்பது சுலபத்தில் முடியக்கூடிய ஒன்றல்ல.

உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் தொடங்கப்பட்ட நடவடிக்கையை அரசாங்கம் தொடர விரும்பினால் அடுத்த பொதுத் தேர்தல் வரைகூட நடத்திக் கொண்டிருக்கலாம்.


அந்தளவுக்கு வன்னி யுத்தம் நீண்டதாக இழுபட்டுச் செல்லக்கூடியது.

எனினும் யுத்தம் ... தென்னிலங்கை அரசியலையும் தீர்மானிக்கும் பிரதான துருப்புச் சீட்டு என்றாகிய பின்னர் புதிய புதிய பெயர்களுடன் போர்க்களக் காட்சிகளை திரையிட்டுக் கொண்டிருப்பதைவிட வேறு வழியில்லை.

பரந்தனுக்குள் புலிகள் ஊடுருவி ஒரு தாக்குதலை நடத்தியபோது, அரசாங்கம் தனது போர் உத்திகளை மாற்றிக்கொள்ளப் போகிறது. நீண்ட நிலப்பரப்புக்களில் படையினர் நிலை கொள்ளும் தந்திரோபாயம் ஆபத்தானது என்று ஆங்கிலப் பத்திரிகைகள் சில விமர்சனங்களை வெளியிட்டன.

பரந்தன் தாக்குதல் என்பது நீண்ட நிலப்பரப்பில் நிலைகொள்ளும் படையினருக்கு புலிகள் விடுத்த அச்சுறுத்தல்தான்.

ஆனால் அதற்கான அரசாங்கமோ படைகளோ உடனடியாக தமது தந்திரோபாயத்தை மாற்றிக் கொள்ளக்கூடும் என்பது சரியான கணிப்பல்ல.




ஏனெனில் நிலப்பரப்புக்களை பிடித்து வைத்திருப்பதைத்தான் போர்க்களத்தில் தாம் பெற்றுள்ள வெற்றிகளின் ஆதாரமாக அரசாங்கம் காட்டிக் கொண்டிருக்கிறது.

இராணுவ ரீதியிலும் வடக்கில் உள்ள பிரதான தளங்களைப் பாதுகாக்க வேண்டுமானால் அவற்றைச் சுற்றிய இராணுவ வேலிகளாக குறிப்பிட்ட நிலப்பரப்பில் நிலை கொண்டாக வேண்டும்.

ஆனையிறவு பிரதான தளத்தைப் பாதுகாக்கும் தற்காப்பு தந்திரத்தோடு தான் கிளிநொச்சிவரை படையினர் நீண்டு நிலை கொண்டுள்ளனர்.

எனவே அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் தெற்கில் அரசாங்கத்தின் 'இமேஜ்' பாதுகாக்கப்பட வேண்டுமானால் வடக்கில் தற்போது கைப்பற்றி நிலை கொண்டுள்ள நிலப்பரப்புக்களைப் படையினர் தக்கவைத்தாக வேண்டும்.

ஆனால் புலிகள் கெரில்லாப் போர்முறையில் பலமான நிலையில் இருப்பதால் எந்நேரமும் படையினர் மீது தாக்குதல் நடத்தப்படலாம்.

உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுப்பார்களேயானால் தெற்கில் தேர்தல் வெற்றியைப் பாதிக்கும்.

முல்லைத்தீவு முகாம் தாக்குதல்போலபடையினருக்குப் பாரிய இழப்பு ஏற்படுமானால், தென்னிலங்கை தேர்தல் களத்திலும் பாரிய அரசியல் பின்னடைவு ஆளும் தரப்புக்கு ஏற்படலாம்.

### அரசியல் ரீதியான தற்காப்பு

எனவே உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் புலிகளுக் கெதிரான பாரிய படைநகர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 07 — 1950

மறைவு: 26 — 01 — 1997

## அமரர் குமாரவேலு செல்வராசா

26-01-97 இல் அமரத்துவமடைந்த குமாரவேலு செல்வராசாவின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று நீர்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், உறவினர்கள்.

காமாட்சியம்மாள் கோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(45448)

# 29 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## தம்பிநாயகம் றொபேட் தவநாயகம்

(இலங்கை வங்கி உத்தியோகத்தர், மேற்றரக்கிளை யாழ்ப்பாணம்)

தோற்றம்: 17-09-1951

மறைவு; 26-01-1997

எம்மைத் தனியே தவிக்கவிட்டுச் சென்றீரோ!
டினூ, டில்லு என்று கூப்பிடும் — உம்
இளம் பிஞ்சுகளை தவிக்கவிட்டுச் சென்றீரோ!
உங்கள் ஆத்மா கர்த்தருடன் இணைந்திட இறைஞ்சுகின்றோம்.

எங்கள் குடும்பத்தலைவரின் மரணச்செய்திகேட்டு எம்மை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியும், மலர் வளையம் சமர்ப்பித்தும், பலவழிகளில் உதவிகள் புரிந்த யாழ். தென்னிந்திய திருச்சபை அத்தியட்சகருக்கும், குருமார்கள்அனைவருக்கும், யாழ்ப்பாணம் இலங்கைவங்கி மேற்றரக்கிளை பிரதான முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும், யா/சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்களுக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்களுக்கும், யா/ தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், நவாலி திருச்சபையினருக்கும், மூளாய் திருச்சபையினருக்கும், அமெரிக்க மிஷன் அச்சக நடத்துனர் ஊழியர்களுக்கும், வட்டுக்கோட்டை திருச்சபையில் இருந்து சேமக்காலை ஆராதனையில் கலந்து கொண்ட அனைவருக்கும், செய்திகள், கடிதங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும். உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் நினைவு கூரும்:

திருமதி இந்திரா தவநாயகம் (மனைவி)
டினூஷா, சில்வியா (பிள்ளைகள்)
ஹரியட் - தம்பிநாயகம் (தாய்)
சகோதரங்கள்.

தொல்புரம் மத்தி,
சுளிபுரம்.

(45405)

# ஊடுருவும் அளவுக்கு பெரும்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வொன்றை மேற்கொள்ளும் முடிவைத் தவிர வேறெந்த வழியும் அரசாங்கத்திடம் இருக்கவில்லை.

ஒப்பிரேஷன்'எடிபல' என்ற பெயரில் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கம் தற்பாது காப்புத்தான்.

அரசாங்கத்தின் தற்பாது காப்புத் தந்திரத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

ஒன்று: அரசியல் ரீதியான தற்பாதுகாப்பு.

இரண்டு: இராணுவ ரீதியான தற்காப்பு.

'எடிபல' நடவடிக்கையில் இரண்டு அம்சங்களும் ஒன்றையொன்று சார்ந்து நிற்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் புலிகள் ஒரு பாரிய தாக்குதல் நடத்துவார்களேயானால் நஷ்டம் இரண்டு.

ஒன்று: வடக்கில் புலிகளை வெற்றி பெற்று வருவதாக ஆளும் தரப்பு தன் முஸ்டியை உயர்த்தி வாக்காளர்களுக்கு முன் காட்ட முடியாமல் போகும்.

இரண்டு: படையினருக்கும் பாரிய இழப்பு ஏற்பட்டுவிடும். படையினர் நிலை கொண்டுள்ள நிலப்பரப்புகளுக்குள்ளும் புலிகள் ஊடுருவிதாக்கி அழிக்கக் கூடும்.

எனவே தமது நஷ்டத்தை தடுக்க அரசியலும், இராணுவமும் கைகோர்த்து நின்று வகுத்துள்ள தற்பாதுகாப்பு வியூகம்தான் 'எடிபல'

பாரிய தாக்குதல்களை புலிகள் நடத்த வேண்டுமானால் பிரதான அணிகள் ஒன்றுகுவிக்கப்பட வேண்டும்.

புலிகளின் பிரதான தளம் வன்னி. தமது பிரதான தளத்தை நோக்கி படைகள் முன்னேறும்போது புலிகளின் பிரதான அணிகளின் முதல் கடமை தளப்பாதுகாப்பாகத்தான் இருக்கும்.

அது மட்டுமல்லாமல் ஏனைய பகுதிகளில் உள்ள புலிகளின் அணிகளையும் தளப்பாதுகாப்பு யுத்தத்துக்காக புலிகளின் தலைமை வன்னிக்கு அழைக்க வேண்டியிருக்கும்.

ஆக, பாரிய தாக்குதலுக்கு புலிகள் தயாராக முடியாமல். தமது தளத்தை பாதுகாக்கும் தற்காப்பு யுத்தக் கட்டத்துக்குள் புலிகளை வைத்திருக்கத்தான் 'எடிபல' தொடங்கப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல் முடியும்வரை இத்தகைய தற்பாதுகாப்புத் தந்திர நடவடிக்கை தொடர்வதையே அரசாங்கம் விரும்புகிறது.

தேர்தல் முடிந்த பின்னர் 'எடிபல' நடவடிக்கையில் ஈடுபட்ட படைகள் முகாம் திரும்பவும் கூடும். புலிகளின் தளத்துக்குள் ஊடுருவித் தாக்குவதற்கே சென்றோம். நோக்கம் நிறைவேறிவிட்டது என்று கூறினாலும் ஆச்சரியமில்லை.

இதேவேளை தற்பாதுகாப்புக்கான படைநகர்வை புலிகளுக்கு எதிரான பாரிய நடவடிக்கை என்று தெற்கில் பிரசாரம் செய்வதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

கிழக்கிலோ நாட்டின் ஏனைய பகுதிகளிலோ புலிகள் தாக்கினால்கூட 'எடிபல' நடவடிக்கை பற்றிய ஆரவாரமான பிரசாரங்கள் மத்தியில் அச்செய்திகள் அமுங்கிப் போய்விடும் என்பது அரசாங்கத்தின் கணிப்பு. அதில் ஓரளவு உண்மையும் உண்டு.

ஆக படைகள் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால்தான் தெற்கில் ஆளும்தரப்பு தேர்தல் பிரசாரத்தில் நிம்மதியாக ஈடுபட்டுக்கொண்டிருக்கலாம்.

உள்ளூராட்சித் தேர்தல் தெற்கில் நடைபெற்றாலும், தேர்தல் வெற்றிக்கான பிரதான பாதை வடக்கில்தான் திறக்கப்பட்டுள்ளது.

போர்க்களத்துக்கு செல்ல [illegible] வழியனுப்பிவிட்டுத்தான், தேர்தல் பிரசார களத்துக்கு ஜனாதிபதி சென்றாகவேண்டும்.

ஒருசையில் விஜயகுமாரதுங்க கொலை தொடர்பான ஜனாதிபதி கமிஷன் அறிக்கையுடனும். மறுகையில் படை நடவடிக்கை ஆரம்பமான செய்தியுடனும் தேர்தல் களத்தில் இறங்கியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

டயர்களை வீதிகளில் போட்டுக்கொளுத்தி கடந்த கால அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மக்களுக்கு நினைவூட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது அரசாங்கம்.

கடந்த கால மனித உரிமை மீறல்களை தெற்கில் நினைவூட்டும் அதேவேளையில், வடக்கு - கிழக்கில் மனித உரிமை மீறல்களின் விளைநிலமாக மாறிவரும் போர்க்களம் பற்றி பீற்றிக் கொள்வதும் அரசாங்கம்தான்.

ஜனாதிபதியின் வசீகரம் பிரதான எதிர்க்கட்சியின் பலவீனம், புலிகளை அடிக்க வேண்டும் என்ற சாதாரண சிங்கள மக்களின் மனோபாவம் போன்றவை அரசாங்கத்தின் முரண்பாடான போக்குகளை மக்களிடம் இருந்து மறைத்துவிடக் கூடும்.

எனவே உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தரப்பு வெற்றிபெற, இன்றைய அரசியல் இராணுவ உத்திகள் உதவக்கூடும்.

ஆனால் நீண்டகால உத்தரவாதம் உண்டா இல்லையா? வன்னிப் போர் முனையைப் பொறுத்தவரை தரைப்பாதையைத் திறந்து படையினர் நீண்ட காலம் நிலைகொள்வது அபாயகரமானவை.

அதனால் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் படையினர் திரும்பியாக வேண்டும். அல்லது புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி பலத்த இழப்புக்களை சந்தித்தாக வேண்டும்.

பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரதினம். ஆனால் வன்னி மக்களுக்கு மற்றொரு இடம்பெயர்வுக்கான ஆரம்ப தினமும் அன்றுதான்.

வவுனியாவில் இருந்து மூன்று முனைகளில் படைகள் முன்னேறின. செட்டி குளத்திலிருந்து மதவாச்சி மன்னார் வீதிவழியாக ஒரு படைப் பிரிவு முன்னேறியது. பூவரசங்குளத்தில் இருந்து இரு முனைகள் ஊடாக படைகள் முன்னேறின. வவுனியா மன்னார் வீதிவழியாக ஒரு படைப்பிரிவும், வடமேற்காக அமைந்துள்ள மடுவை நோக்கி இன்னொரு படைப் பிரிவும் முன்னேறின.

செட்டிகுளத்தில் இருந்து மதவாச்சி மன்னார் வீதியால் சென்ற படையணியும் பூவரசங்குளத்தில் இருந்து வவுனியா மன்னார் வீதிவழியாகச் சென்ற படைப்பிரிவும் பறையனாளங்குளம் என்னுமிடத்தில் சந்தித்தன.

பறையனாளங்குளம் வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ளது. அங்கிருந்து தொடர்ந்து படைகள் முன்னேறினால் மன்னார் வரை செல்ல முடியும். வவுனியாவில் இருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது மன்னார்.

வவுனியா மன்னார் வீதி வழியாக மன்னார் நோக்கிச் செல்லும் படைப்பிரிவைவிட மடுநோக்கி முன்னேறும் படைகள்தான் புலிகளின் வன்னித்தளப் பாதுகாப்பு அச்சுறுத்தல்.

மடு நோக்கி முன்னேறிய படைகள் தற்போது பண்டிவிரிச்சான், பெரிய தம்பனை போன்ற பகுதிகளில் நிலை கொண்டுள்ளன.

பெரிய தம்பனையை அடுத்துள்ள பகுதி பெரிய பண்டிவிரிச்சான். அங்குதான் புலிகளின் பாரிய முகாம்கள் இருக்கின்றன. அது தவிர அடர்ந்த காட்டுப்பகுதியும் அங்குதான் ஆரம்பமாகிறது.

எனவே பெரிய பண்டிவிரிச்சான் பகுதியை படைகள் நெருங்குமானால் புலிகளின் பொறிக்குள் சிக்கும் ஆபத்து இருக்கிறது.

### புலிகளின் பொறி

அதன் பின்னர் காடும், காடு சார்ந்த பகுதிகளுக்குள்ளும் போரைத் தொடர வேண்டியிருக்கும். அந்த காடுகளும், பூகோள சூழலும் புலிகளுக்கு அந்துப்படியானவை. படைகளுக்கோ புதிதானவை.

எனவே அங்கு புலிகளின் காட்டுப்புற கெரில்லாத் தாக்குதல்களுக்கு படையினர் முகம் கொடுப்பது எளிதல்ல.

அதனால்தான் மடுவை நோக்கி முன்னேறிய படைகளுக்கு பலத்த எதிர்ப்பைக் காட்டாமல் புலிகள் உள்ளுக்கு இழுக்கிறார்கள் என்ற தயக்கமும் படையினரிடம் எழுந்துள்ளது.

மொத்தம் 10 ஆயிரம் படையினர் 'எடிபல' நடவடிக்கையில் இறக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. 20 ஆயிரம் படையினர் இறக்கப்பட்டுள்ளதாகப் புலிகள் கூறியுள்ளனர்.

எனினும் புலிகளின் காட்டுப்புற கெரில்லாத் தாக்குதல்களை எதிர்கொள்ளவும், வன்னியில் தரைப் பாதை திறந்து படையினர் நிலை கொண்டிருக்கவும் படையினரின் எண்ணிக்கை போதுமானதல்ல.

அதுதவிர புலிகளிடம் ஆட்லறி பீரங்கிகள் இருக்கின்றன. அவைதவிர நீண்டதூர தாக்குதலுக்கு உதவும் கனரக மோட்டார்களும் இருக்கின்றன. அதனால் பெரும் நிலப்பரப்புக்களில் படையினர் தங்கியிருப்பது தொடர் இழப்புக்களை உருவாக்கும்.

'எடிபல' நடவடிக்கை மூலமாக படையினர் இதுவரை முன்னேறியுள்ள பகுதிகளில் புலிகளின் சிறு காவலரண்கள் சில மட்டுமே இருந்தன. வழக்கமாக புலிகள் அப்பகுதிகளில் பெருமளவு இருப்பதில்லை. மேலும் சில பகுதிகள் படைகளும், புலிகளும் நடமாடாத பகுதிகள், 'நோமேன் ஏரியா' என்றழைக்கப்படுபவை, இப்போது அந்தப் பகுதிகளை எல்லாம் உள்ளடக்கித்தான் இத்தனை கிலோ மீற்றர் முன்னேறிவிட்டோம். புலிகளின் பிரதான பகுதிகளுக்குள் ஊடுருவிவிட்டோம் என்று படைத்தரப்பினர் பிரசாரம் செய்கின்றனர்.

### முன்னர் நடந்த தாக்குதல்கள்

1991 ஆம் ஆண்டிலும், 92 ஆம் ஆண்டிலும் வன்னியில் பல்வேறு படை நடவடிக்கைகள் இலங்கைப்படையினரால் மேற்கொள்ளப்பட்டன.

மணலாற்று (வெலிஓயா) காட்டுக்குள் 'ஒப்பரேஷன் மின்னல்', வவுனியாவில் இருந்து 'வன்னி விக்கிரம கட்டம் 1, கட்டம் 2', மற்றும் 'ஓம்பரேஷன் கஜபார' போன்ற பெயர்களில் இராணுவ நடவடிக்கைகள் வன்னியில் மேற்கொள்ளப்பட்டன.

92 இல் 'ஒப்பரேஷன் கஜபார' நடவடிக்கையின் போது படையினருக்கு பாரிய பின்னடைவு ஏற்பட்டது. 106 மில்லி மீட்டர் டாங்கி எதிர்ப்பு பீரங்கி உட்பட பல ஆயுதங்களை படையினர் புலிகளிடம் இழந்தனர்.

எனவே — வன்னிப் போர் முனையில் படையினர் எந்தளவு தூரம் காடுசார்ந்த பகுதிகளுக்குள் முன்னேறுகிறார்களோ அந்தளவுக்கு ஆபத்தும் உண்டு. எனவே முன்னேற்றம் என்பதை வெற்றியின் அறிகுறியாகக் கணிப்பிட முடியாது.

★

நன்றி:
தினமுரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்தி வரவேற்கிறோம்

யாழ். மாவட்டத்திற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று வந்திருக்கும்

**திரு. எஸ். கே. சண்முகநாதன்**

அவர்களை கூட்டுறவு வளம் பெற, நாடு நலம் பெற, பணி சிறந்து ஓங்க வாழ்த்தி வரவேற்கிறோம்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க
பணியாளர் நலன்புரிச் சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
பணியாளர் சி. க. கூ. சங்கம்.

மல்லாகம்,
22-02-1997. (சி-183)

## நினைவு அஞ்சலி
**(25 - 02 - 97)**

| 41-ம் ஆண்டு | 1-ம் ஆண்டு |
|---|---|
| அமரர் S.S. நாகலிங்கம் | திருமதி தங்கம்மா நாகலிங்கம் |
| அன்னை மடியில்: 02 - 04 - 1902 | அன்னை மடியில்: 05 - 04 - 1914 |
| சிவனடியில்: 29 - 04 - 1956 | சிவனடியில்: 06 - 03 - 1996 |

நல்லூர்க்கந்தா! நின் திருவடியில் எம் அம்மை, அப்பர் அமைதிபெற இன்றும் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

43. செட்டித் தெரு,
நல்லூர். (45452)

உ
கணபதி துணை
ஸ்ரீ நாராயண ஜெயம்

## உபநயன அழைப்பு

நிகழும் மங்களகரமான தாத்ரு வருடம் மாசிமாதம் 13 ஆம் நாள் (நாளை 24-02-97) திங்கட்கிழமை பகல் 11-18 மணி முதல் 12-30 வரையுள்ள இடபலக்கின சுபவேளையில் அல்வாய் மாலைசந்தை பிள்ளையார் கோயில் முன்னாள் பிரதமகுரு
**சிவஸ்ரீ ச. முத்துக்குமாரசாமிக் குருக்களின் பேரனும்**

எமது ஏக புதல்வனுமாகிய
**சிரஞ்சீவி ரமேஷ் அவர்களுக்கு**

உபநயன பிரம்மோபதேசம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்:
**சிவஸ்ரீ மு. ஸ்கந்தசபேசக் குருக்களும், பாரியாரும்.**

அல்வாய்.கிழக்கு,
அல்வாய் (45413)

## முதலாண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 — 07 — 19[illegible]8



உதிர்வு: 24 — 02 — 1996

### ஜோண் ஏரோணி

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நாளை 24 - 02 - 97 திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு இரங்கற் பலி நிறைவேற்றப்படும். இப் பலியில் பங்கு பற்றி இல்லத்தில் நடைபெறும் மதிய விருந்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவில் வாடும்:
**அன்பு மனைவி**
**திருமதி றோசலின் ஏரோணி,**
**மற்றும் சகோதரி, உற்றார், உறவினர்.**

'' அருள் யோ வாசா ''
41, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (45443)

## தொழிற்சாலை: இயங்க வைக்க கோரிக்கை

குருநகர், பெப்-23

குருநகர் பகுதியில் நீண்ட காலமாக இயங்காமல் இருந்து வரும் பனிக்கட்டி உற்பத்தி தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் கோரியுள்ளனர்,

இது தொடர்பாக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி.யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றைஅனுப்பி வைத்துள்ளது.

(ஐ-51)

## பெறுபேறு இன்னும் கிடைக்கவில்லை

வடமராட்சி, பெப். 23

அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளில் வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலயத்துக்கான பெறுபேறுகள் இதுவரை பாடசாலைக்குக் கிடைக்கவில்லை.

இப்பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் இதனால் ஏமாற்றமடைந்துள்ளனர்.

(ஐ-173)

## மாணவர் சங்கம் நிதி உதவி

சண்டிலிப்பாய், பெப். 23

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆஸ்திரேலியக் கிளையினர் கல்லூரியின் அபிவிருத்திக் சென 67 ஆயிரம் ரூபாவை அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளனர்

இந்த நிதி உதவியைக் கொண்டு கல்லூரியின் நூல் நிலையைக் கட்டடம் திருத்தப்பட்டுள்ளது. அத்துடன் நூல்களும் கொள்வனவு செய்யயப்பட்டுள்ளன.

(ஐ-135)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்·23

பனை தென்னைவள அபிவிருத்தி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள திரு.கா பரநிருபசிங்கத்தைப் பாராட்டுவதற்காக கோப்பாய் பிராந்திய சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழா இன்று ஞாயிறு காலை 9.30மணிக்கு நீர்வேலி பிராந்திய சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

## நல்லூரில் குழந்தைகளுக்கு தடுப்பூசி

நெடுந்தீவு, பெப். 23

நல்லூரில் உள்ள யாழ். மாநகர சுகாதாரப் பகுதியின் குடும்ப நல உத்தியோகத்தர் பணிமனையில் நாளை திங்கட்கிழமை குழந்தைகளுக்கான நோய்த் தடுப்பு ஊசி ஏற்றப்படும்.

(ஐ-111)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவி

யாழ்ப்பாணம், பெப் 23

யாழ். கல்வி வலயம் 11இன் கீழ் உள்ள பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை வலயம் 11 கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார். ஆங்கில தகைமை உட்பட தமது சுயவிவரங்களுடன் விண்ணப்பங்களை அருகில் உள்ள கோட்டக்கல்வி அலுவலகங்களில் [illegible] விண்ணப்பதாரிகள் கேட்கப் பட்டுள்ளனர்.

(ஐ-3)

## அறுவடைக்குத் தேவையான கூலி ஆள்களுக்கு பற்றாக்குறை

அராலியில் நெல்வயல்கள் அறுவடை செய்வதற்குத் தேவையான விவசாய தொழிலாளர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது.

இப்பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான தொழிலாளர்கள் இடம்பெயர் வைத் தொடர்ந்து மீளக்குடியமராததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு அறுவடை தாமதமடைவதால் பலவயல்களில் ஈரம் காய்ந்துள்ளது.

இதனால் உழவு செய்து சிறுதானியங்களான எள்ளு, பயறு போன்றவற்றை பயிரிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. (இ-12)

## தேவை - CLERKS

A/L படித்த Typing, ஆங்கிலம் ஓரளவு தேர்ச்சியுள்ள பெண்கள் தேவை. திறமைக்குத் தக்க சம்பளம் வழங்கப்படும். கிழமை நாள்களில் நற்சான்றிதழ்களுடன் காலை 9-00 மணி முதல் நேரில் வரவும்.

பரீட்சைப்பகுதி: **BOND INSTITUTES**
**58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
(45454)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி
**23–02–1997**



### திருமதி பூமணி நடேசன் B. A.
(Dip.in-Ed.)

மலர்வு: 24-07-1934
உதிர்வு: 24-01-1997

இன்று நீர் உமது உடலை நீத்து 31 ஆவது நாளாகின்றது. உமது மலர்ந்த முகமும், உயர்ந்த உள்ளமும் அன்று போல் எங்கள் உள்ளங்களில் என்றும் இருக்கும். உமது ஆத்மா சிவபதமெய்த இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபீண்டி, சிரார்த்தம், பகல் பந்தி போசனம் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

'பூ அகம்'
மீசாலை. [சி/185]

## முதலாம் வருட நினைவு அஞ்சலி

தோற்றம்: 26 — 12 — 1950



மறைவு: 06 — 03 — 1996

### அமரர் நாகரட்ணம் குணபாலசிங்கம்
**(குணம்)**
(சட்டத்தரணி, கைதடி, பன்னாலை)
**திதி: 25 - 02 - 1997**

எனதருமை அண்ணாவே!
உறவின் சிகரமாய், உத்தம நண்பனாய்
பாசத்தின் ஒளிவிளக்காய், பண்பின் உறைவிடமாய்
வாழ்ந்து, வழிகாட்டி நீ எங்கு சென்றாய்?
நான் வாழும்வரை உன் நினைவோடு வாழ்வேன்.

உனதருமைத் தம்பி.

''சிவபதி''
கைதடி தெற்கு, கைதடி. (45449)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம், குறிப்பு: காலை 8.30மணி வரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
[9306]

இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வேண்டிய நிறைகளில், காலை 9 மணிவரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். குளப்பிட்டி, ஆனைக்கோட்டை றோட், (அரசடி) கொக்குவில், மேற்கு.
[45437]

## விற்பனையாகின்றது

ஆண்டு 9 ச்குரிய வரலாறு. ஆக்கம்: கே. எஸ். முத்துலிங்கம் விலை ரூபா 30/- கிடைக்குமிடம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[45399]

உயர்தர வகுப்புக் குரிய தாவரவியல் நூல்- களைகள் ஆக்கம்: சந்திரசேகரன், விலை ரூபா 40/- கிடைக்குமிடம்: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [45400

## மணப்பெண் தேவை

ஜேர்மன் பாஸ்போட்டுடன் அங்கு தொழில் புரியும் கோப்பாய் தெற்கு, ஆண் வயது 36, உயரம் 5 அடி 8அங்குலம் மூல நட்சத்திரம், உதயலக்கினம்; மேடம், நவாம்சலக்கினம்; சிங்கம், சந்திரலக்கினம்: தனு, பொருத்தமான புதுமணப் பெண் இராசி: மேடம். மிதுனம், சிங்கம். இலக்கினம்: சிங்கம், துலாம், தனு இவற்றிலொன்றுள்ளது விரும்பத்தக்கது. மே/பா இல 587, உதயன், யாழ்ப்பாணம்,
[45433]

சுவிற்சர்லாந்தில் தொழில் புரியும் படித்த இந்து கௌரவ குடும்ப 40 வயது மணமகனுக்கு, 33 வயதிற்குட்பட்ட படித்த அழகிய மணமகள் தேவை. Sponsor மூலம் பெண் அழைக்கப்படுவார், சாதகம், பிறந்த நேர விவரத்துடன் விண்ணப்பிக்கவும், இல. 589 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
[45442]

சுவிற்சர்லாந்தில் தொழில் புரியும், படித்த இந்து கௌரவ குடும்ப, 32 வயது மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. Sponsor மூலம் பெண் அழைக்கப்படுவர், சாதகம், பிறந்த நேர விவரத்துடன் விண்ணப்பிக்கவும். இல:- 588 மே/பா ''உதயன்'' யாழ்ப்பாணம். (45440)

## அன்பளிப்புகள்

துணிகளின் இளையூடாகச் செயற்பட்டு எண்ணெய்ப் பிசுக்களையும், அழுக்கையும் அகற்றும் நுரைவளம் கொண்ட மில்க்வைற் சலவைத் தூள் 6/-, நீலசோப் 7/-, மெடிக்கேற்றர் 8/-, பார் 20/-, வெற்றுப் பக்கற் மேலுறைகளுக்கு. அன்பளிப்புகள் ''மில்க்வைற்''.
[சி/174]

## SERVICING

For Servicing T. V/ V. C.R/ Radio, Watches, Fitting T. V Antenna Qualified experienced Technical and Tutorial Staff. T. Thanabalasingam B.Sc (Ceylon) Dip in Electronic Engineering (Lond.) 284. Stalney Road. Front of Nagavaihar) Jaffna.
(45441)

## மணப் பெண்கள் தேவை

என்ஜினியர், டாக்டர், எக்கவுண்டன்ட், கிளார்க், கிராமசேவகர், ஆசிரியர் போன்ற பதவிகளிலுள்ள ஆண் ஜாதகங்கள் உண்டு. இவற்றுக்குத் தகுதியான பெண் ஜாதகங்கள தேவை. குறிப்புகளுடன் தொடர்பு கொள்ளவும். க. திருஞானசப்பந்தசர்மா, ஸ்ரீ முருகன் சோதிட நிலையம் நல்லூர் வடக்கு. (45445)

## ஆங்கிலம்/கணிதம்

O/L Distinction, Credit ஒரே அமர்வில் பெறுபேறடையும், ஒரு மாதத்தில் ஆங்கிலம் பேச எழுதவும், கற்பிக்கப்படும். London Inter ஆசிரியர். 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.
[45429]

## மணமக்கள் தேவை

பெண் ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்குத் தகுந்த மணமக்கள் தேவை. க. திருஞானசம்பந்தசர்மா, ஸ்ரீ முருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு.
(45451)

உ
ஸ்ரீராம ஜயம்

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

**அன்புடையீர்!**
நிகழும் தாது வருடம் மாசித் திங்கள் 4ஆம் நாள் (15-02-1997) சனிக்கிழமை ஸ்ரீராமபதமெய்திய எங்கள் பாசமிகு மகளும், சகோதரியுமான

## திருமதி
## லோகேஸ்வரி இராமச்சந்திரசர்மா
## (குஞ்சம்மா)

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் தாது வருடம் மாசித் திங்கள் 13ஆம் நாள் (24-02-97) திங்கள் முதல், மாசித்திங்கள் 16ஆம் நாள் (27-02-97) வியாழக்கிழமை வரை நடைபெறும்.

24-02-97 திங்கட்கிழமை — **தசாகம்** காலை 9-30 மணி
25-02-97 செவ்வாய்க்கிழமை — **ஏகோதிஷ்டம், மாசிகம்**
26-02-97 புதன்கிழமை — **சபிண்டீகரணம்**
27-02-97 வியாழக்கிழமை — **கிருஹயக்ஞும்** (சுத்தி புண்யாக வாசனம்)

மேற்படி கிரியைகளில் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
**திருமதி உருக்குமணியம்மா கணபதிசாமிக்குருக்கள்**
**ச. க. சுதர்சனக்குரு**
**ச. க. இராமச்சந்திரக்குரு** ] **குடும்பத்தினர்**
**ச. க. புருஷோத்தமக்குரு**
(விசாகன்)

''வல்லிபுராலயம்''
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

ராம் ராம் ராம் (45432)

# நினைவஞ்சலி

மலர்வு: 17 – 09 – 1951



உதிர்வு: 26 – 01 – 1997

''ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்''
1 கொரி. 15;22

அமரர்
## தம்பிநாயகம் றொபேட் தவநாயகம்
(இலங்கை வங்கி மேற்றரக் கிளை, யாழ்ப்பாணம்)

வங்கியிலே தானிணைந்தீர்;
வளமான வாழ்வமைத்தீர்.
இங்கெல்லாம் எமை மறந்து
ஏனையா சென்றிட்டீர்?
மங்குறாப் புகழ் கொண்டீர்!
மாணடி சேர்ந்திட்டீர்.
பொங்கி வரும் கண்ணீரை, நாம்
புஸ்ப ஞ்சலி ஆக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதான முகாமையாளரும்,**
**ஊழியர்களும்.**
**இலங்கை வங்கி மேற்றரக் கிளை,**
**யாழ்ப்பாணம்.**

(45446)

# முக்கிய அறிவித்தல்

போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும்
அடையாள அட்டை கவரிடுதலுக்கும்
நியாயமான விலை குறைப்பு
செய்துள்ளோம்.

## சன்லைட் றைக்கிளீனர்ஸ்
**பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.**
[45453]

# அஞ்சலி

## முருகேசு பொன்னுச்சாமிப்பத்தர்
(யாழ். ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னனான் தலைவர்)

கடமையே கண்ணாகவும், நேர்மையே நோக்காகவும் கொண்டு அரும்பணியாற்றிய முன்னாள் தலைவர் காலஞ்சென்ற ''முருகேசு பொன்னுச்சாமிப் பத்தர்'' அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் மறைந்த தலைவரின் குடும்பத்தினருக்கு சங்கத்தின் சார்பாக அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி!

முன்னாள் செயலாளர்கள்:
**வே. கந்தசாமி, கு. கருணாகரசிங்கம்,**
**கோ. புவனேந்திரன்.**
**யாழ். ஆபரணத் தொழிலாளர்**
**கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.**
(45447)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி நேசம்மா அரசரத்தினம்

**மலர்வு:** 23 - 06 - 1918
**உதிர்வு:** 25 - 01 - 1997

அன்பினால் ஆட்சி செய்து அனைவரையும் உபசரித்து
பண்பினால் உயர்ந்து நின்ற உத்தமியே!
உள்ளத்தில் வேதனைகள் ஊற்றாய் பொங்கி நிற்க
கண்ணுக்கு எட்டாமல் காதவழி போனதென்ன?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

எங்கள் அன்னையது வீட்டுக்கிருத்தியம் நாளை 24-02-97 திங்கட்கிழமை பி. ப. 12-30 மணி (இலங்கை நேரம்) யளவில் உடுவிலிலுள்ள எமது தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னை சிவபதமடைந்தபோது எங்கள் குடும்பத்தவர்க்கு பலவழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள்,**
**சகோதரி, பேரப்பிள்ளைகள்.**

''லவ்'' லேன்,
உடுவில்,
சுன்னாகம்.
(45450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சமயப் பாடசாலை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இன்று மாவட்ட மட்டத்தில் இந்து சமய அறிவுப்பரீட்சை ஒன்றை நடத்துகின்றது. திணைக்களத்தின் அனுசரணையுடன் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவர்.

யாழ்ப்பாணத்தில் அரச அனுசரணையுடன் அறநெறிப் பாடசாலைகள் இயங்குகின்றன என்பது பலருக்குப் புதிய செய்தியாகும்.

சமயக் கல்வி சிறுபராயத்திலேயே ஊட்டப்பட வேண்டியது. சமயம் ஒரு வாழ்க்கை நெறி என்பதால், மனித வாழ்வை மேம்படுத்த வல்ல நல்லொழுக்கங்களையும் அறநெறிகளையும் சிறுவர்களுக்கு — மாணவர்களுக்கு — அதனூடாக ஊட்டுவதே பொருத்தமானதாகும். சமய போதனையைப்பெறும் சிறுவர்கள் தான், வளர்ந்த பின்னர் அந்தப் பின்னணியில் வாழ்ந்து நற்பிரசைகளாக விளங்க முடியும். சீரான சிறப்பான சமூகத்தினை உருவாக்கும் பங்காளிகளாக முடியும்.

பாடசாலைகளிலும் சமய பாடம் கற்பிக்கப்படுகிறது. வார இறுதி மற்றும் விடுமுறை நாள்களில், வேளைகளில் சமய பாடம் மேலதிகமாக சிறுவர்களுக்குப் போதிக்கப்படுவது அதிக பயனைத்தரும்.

சமயத்தின் அடிப்படையான நல்ல பழக்க வழக்கங்களை, ஒழுக்க நெறிகளைப் போதிப்பது இன்றைய காலத்தின் அவசிய தேவையாகிறது.

இன்றைய இளம் சமுதாயம் நற்பழக்கவழக்கங்கள் குன்றிய ஒன்றாகவே வளர்ந்து வருவது கவலைக்குரியது. பெற்றோர்கள் பெரியோர்களுக்கு மதிப்பளிக்காமை, பொது இடங்களில் பணிவின்மையையும் அடக்கமின்மையையும் வெளிப்படுத்தி நடந்து கொள்வது, பிறர் நலன் கருதாது அவர்களுக்கு இடையூறு விளைவித்தல், தமது விருப்பத்துக்கு இணங்கிய செயற்பாடுகளைப் பிறர் மீது திணித்துத் தொல்லை கொடுத்தல், மற்றவர்களுடன் பேசும் போது கரடுமுரடான பாங்கினைக் கைக்கொள்ளுதல், மது அருந்துதல், புகைத்தல் போன்ற தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகுதல் மற்றும் பல சமூக விழுமியங்களைக் கெடுக்கும் கெட்ட பழக்கங்களில் நாட்டங் கொள்ளுதல் என்பன சிலவாகும்.

இதனை நவீன உலகத்தோடு ஒத்தோடுதல் மற்றும் சந்ததி இடைவெளி என்று கூறி, கண்டும் காணாதவர்களாக மூத்தோர்கள் முடங்கி இருத்தலாகாது. இன்றைய சிறுவர்களும் அந்த நிலைக்குச் செல்ல காரணர்களாக இருந்துவிடக்கூடாது.

சமயக் கல்வி, அதன் வழி ஒழுகுதல் என்பனவே சமூக ஒழுக்கத்தையும் சிறப்பையும் காப்பாற்ற வல்லன.

இதனை உணர்ந்து, சமயப் பாடசாலைகளின் — அறநெறி பாடசாலைகளின்- எண்ணிக்கையை அதிகரித்து அவற்றைப் பரந்த அளவில் நிறுவ வேண்டும்.

பாடசாலைகளில் மட்டுமன்றி வீடுகளிலும் பாலர்களுக்கு சமயப் பின்னணியுடன் ஒழுக்கங்கள் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. சீரான வாழ்க்கைக்கும், சிறப்பான சமூகத்துக்கும் நல்லொழுக்கங்களே அத்திவாரம். அவற்றின் விளைநிலம் சமய நெறியே.

# பயமுறுத்தல் காரணமாகவே தேர்தலிலிருந்து விலகினோம்

## ஐ. தே. க. வேட்பாளர் மூவரும் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 23

''பயமுறுத்தல் மற்றும் நிர்ப்பந்தங்கள் காரணமாகவே தேர்தலில் இருந்து விலகுவதாக நாம் அறிவித்தோம்.''

— இவ்வாறு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகுவதாக அறிவித்த மூன்று ஐ. தே. கட்சி வேட்பாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தின் ஆளும் கட்சி எம்.பியான நாலந்தா எல்லாவெல படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து —

இரத்தினபுரி மாநகர சபைக்குப் போட்டியிடும் மூன்று ஐ. தே. கட்சி வேட்பாளர்களும் —

நிவித்திகல பிரதேச சபைக்குப் போட்டியிடும் ஐ.தே.க. வேட்பாளர் ஒருவரும் —

தாங்கள் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தனர்.

ஆனால் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளைக்கு அவர்கள் சமர்ப்பித்துள்ள சத்தியக் கடதாசியில் பயமுறுத்தல், நிர்ப்பந்தம் ஆகியவை காரணமாகவே தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகுவதாக தாங்கள் அறிவித்ததாகவும்—

கட்சி தங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கினால் தாங்கள் தொடர்ந்து தேர்தலில் போட்டியிடத் தயார் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-150)

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்; புலிகள் மீண்டும் வலியுறுத்து

''இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தை சம்பந்தப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் அக்கறை கொண்டுள்ளனர்.''

விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் 'ரோய்ட்டர்'' நிறுவனத்துக்குப் பேட்டியளித்த புலிகளின் பிரமுகர் அன்ரன் ராஜா என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

''மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தை ஈடுபடுத்துவதில் புலிகள் அக்கறையாக இருப்பது இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதில் புலிகள் கொண்டுள்ள அக்கறையையே காட்டுகிறது''

— என்றும் அவர் சொன்னார்

இதற்கிடையில் —

''ரோய்ட்டர்'' செய்தி நிறுவனத்துக்குப் பேட்டியளித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் —

''இலங்கை இனநெருக்கடி உள்நாட்டு விவகாரம் அதில் மூன்றாம் தரப்பு பங்குகொள்வது என்பது பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளக் கூடியதல்ல'' —என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அந்தப் பேட்டிக்குப் பதிலளிக்கும் வகையிலேயே புலிகள் பிரமுகர் அன்ரன் ராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-150)

## சோலை வரி

குருநகர், பெப். 23

யாழ். மாநகர சபையினர் குடியிருப்பாளர்களிடம் இருந்து சோலைவரியை அறவிட நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது. (இ-51)

## மடு அகதி முகாமில் 21 ஆயிரம் பேர்

கொழும்பு, பெப். 23

மடு அகதி முகாமில் உள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 'எடிபல' இராணுவ நடவடிக்கையை அடுத்து 21 ஆயிரமாக அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-150)

## விமான விபத்து குறித்து விசாரணை

கொழும்பு, பெப். 23

இரத்மலானை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளான 'அன்ரனோவ்32' விமானம் பற்றி தற்போது முழுவிசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இலங்கை விமானப்படையைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் குழு இந்த விசாரணைகளை நடத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானத்தின் கறுப்புப்பெட்டி மேலதிக விசாரணைக்காக இந்த விமானத்தைத் தயாரித்த நிறுவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட இருப்பதாக விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார். (இ-5)

## அறவழி ஆண்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 23

அறவழி நிறுவனத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

கைதடி நுணாவிலில் உள்ள தலைமைப் பணியகத்தில் காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து அங்கிருந்து 10.30 மணிக்கு அமைதி ஊர்வலம் கைதடி சைவச் சிறுவர் இல்லம் வரை இடம்பெறும். முற்பகல் 11 மணி முதல் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மூத்த ஆசிரிய சேவையாளர்களைக் கௌரவிக்கும் வைபவமும், திட்ட மாணவர்களுக்கான உதவி வழங்கல் நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன. (ஐ)

## நெத்தலி கருவாடு

செம்பியன்பற்று, பெப். 23

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள குடத்தனை, நாகர்கோயில், மாமுனை, மருதங்கேணிப் பகுதிகளில் நெத்தலிக் கருவாட்டின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

1 கிலோ நெத்தலிக் கருவாடு 50 ரூபாயில் இருந்து 60 ரூபா வரை தற்போது விற்பனையாகிறது. (இ 36)

## மரக்கறி விலைவீழ்ச்சி

கொழும்புத்துறை, பெப். 23

குடாநாட்டில் தற்போது மரக்கறி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

பிரதான சந்தைகளில் கத்தரி கிலோ 20ரூபா வாகவும்—

கரட் 20ரூபா வாகவும் —

லீக்ஸ் 52ரூபா வாகவும்—

வாழைக்காய் 30ரூபாவாகவும்—

தேசிக்காய் 20ரூபாவாகவும் —

பயிற்றங்காய் 20ரூபாவாகவும் —

வெங்காயம் 15ரூபாவாகவும் —

பச்சைமிளகாய் 30ரூபாவாகவும்—

உருளைக்கிழங்கு 40ரூபாவாகவும் —விற்கப்படுகிறது

இதேவேளை நகர, கிராமப்புறக் கடைகளில் கூடுதல் விலையில் இம்மரக்கறி வகைகள் விற்கப்பட்டு வருவதையிட்டு பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (இ-30)

# இறைவனுக்கு செவிமடுக்கும் போது நம் விசுவாசம் வளர்க்கப்படுகிறது

இன்று தவக்காலத்தின் இரண்டாவது ஞாயிறு. இன்றைய கருப்பொருள் நாம் இறைவார்த்தைக்கு செவிமடுக்கும்போது நமது விசுவாசம் வளர்க்கப்படுகிறது என்பதாகும்.

ஆபிரகாமும் சாராவும் வயது முதிர்ந்த தம்பதிகள். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. வயது முதிர்ந்த அவர்களுக்கு ஒரு மகனைத் தருவதாகவும் ஆபிரகாமின் சந்ததியைப் பெருக்குவதாகவும் கடவுள் அறிவித்திருந்தார். கடவுளின் வார்த்தைக்கு செவிமடுத்தார்கள். ஈசாக்கு என்னும் மகன் பிறந்தான். ஆனால் கடவுள் உன் மகனை ஒரே மகனை நீ பலியிட வேண்டும் என்று கேட்டார். ஆபிரகாம் சிறிதும் யோசிக்கவில்லை. மகனைப்பலியிட ஆயத்தமான போது கடவுள் தடுத்து என் வார்த்தைகளை நீ கேட்டு அதன்படி செயற்பட முற்பட்டமையால் ''உன் மீது உண்மையாகவே ஆசிபொழிந்து விண்மீன்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் உன் வழி மரபை பலுகச் செய்வேன்'' (ஆதி. 22:17)என்று ஆசி வழங்குகிறார்.

ஒரு முறை இயேசு இராயப்பரையும் யாகப்பரையும் அருளப்பரையும் அழைத்துக் கொண்டு மலை ஒன்றில் ஏறுகிறார். அங்கே அவர்கள் முன் தோற்றம் மாறுகிறார். இயேசுவின் தோற்றத்தைக் கண்டு மோயிசனும் எலியாசும் அங்கு தோன்றி அவருடன் உரையாடுகிறார்கள். என்றுமே காணாத இயேசுவின் அன்றைய தோற்றத்தைக்கண்டு ''நாம் இங்கே உமக்கொன்றும், மோயிசனுக்கொன்றும் எலியாசுக்கொன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம். நாம் இங்கே இருப்பது நல்லது''என்கிறார் இராயப்பர்.

அப்போது மேகம் அவர்கள் மேல் நிழல் இட ''என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவருக்கு செவி சாயுங்கள்'' (மாற் 9: 7) என்ற குரல் ஒலிக்கிறது.

முதலாம் வாசகத்தில் (ஆதி. 22 : 01 – 18) விசுவாசத்தின் தந்தை ஆபிரகாம் தன் மகனை பலி கொடுக்க ஆயத்தமானது''தம் சொந்த மகன் என்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்த'' (உரோ 8:32) கடவுளின் மாபெரும் செயலை முன் குறித்து நிற்கிறது.

ஆபிரகாமின் மகனைப் போல் இயேசுவும் சாவு— வாழ்வு என்னும் இரகசியத்தில் வாழ்கிறார். இதை இன்றைய நற்செய்தி வாசகத்தில் (மாற்: 9:2-10)வரும் இயேசுவின் தோற்ற மாற்ற நிகழ்வு தெளிவாக்குகிறது.

### தவக்காலச் சிந்தனை

தோற்ற மாற்ற நிகழ்வு, ஓர் இறைவெளிப்பாடு. மோயிசனும் எலியாசும் பழைய புதிய ஏற்பாடுகளின் பிரதிநிதிகள். இயேசுவிற்கு அவர்களோடு பேச வேண்டிய இரகசியம் இருந்தது. அவரது பாடுகள் சாவு பற்றிய இரகசியம் அவரது மகிமையும் — புகழும் பற்றிய இரகசியம், அவரது மகன் நிலையும் - தந்தை நிலையும் பற்றிய இரகசியம் மீட்பிற்கான காலங்கள் ஊடாக கடவுளின் செயல்பாடு — இந்த உலகத்தோடு கடவுளின் செயல்பாடு பற்றிய இரகசியம் எனப் பலப்பல. தவக்காலத்தில் இவ்வாசகத்தை நாம் வாசிக்கவும் தியானிக்கவும் காரணங்கள் உண்டு.

1. இயேசுவின் சீடர்கள் முதல் முறையாக இயேசுவின் மகிமையான மாட்சி மிக்க நிலையைப்பார்க்கிறார்கள். இயேசுவின் பாடுகள்— சாவு பற்றிக் கேட்டு அதிர்ந்து போன அவர்களுக்கு அதற்குப் பின் வர இருக்கின்ற மாட்சி நிலை பற்றிய காட்சி ஒன்று தேவைப்பட்டது. அது அவர்களின் தனிப்பட்ட வாழ்விலும் ஓர் ஆன்மீக அனுபவமாக இருந்தது. இத்தவக் காலத்தில் நாமும் தோற்ற மாற்றம் பெற நல்ல ஆன்மீக அனுபவம் பெற வேண்டும்.

2. இயேசுவின் தபோர் மலைத்தோற்ற மாற்ற அனுபவமும், ஒலிவமலை ஜெஸ்தமெனி அனுபவமும் இயேசுவின் வாழ்வின் இரண்டு பக்கங்களைக் காட்டும் அனுபவங்களாகும் இரு அனுபவங்களின் போதும் இராயப்பர், யாகப்பர், அருளப்பர் என்ற சீடர்களே இருந்தார்கள். தபோர் மலை மாட்சிமையையும் இறைத்தன்மையையும் காட்ட, ஒலிவமலை பாடுகளையும் மனிதத் தன்மையையும் காட்டுகிறது. நமது வாழ்விலும் இரண்டு பக்க அனுபவங்கள் உண்டு. தபோர் அனுபவம் மகிழ்ச்சி அன்பு நிறைந்ததாகவும், ஜெஸ்தமெனி அனுபவம் வேதனை வெறுப்பு மிக்கதாகவும் உள்ளது.

இரண்டு அனுபவம் வேளைகளிலும் இறைவார்த்தையைக் கேட்போம். இரண்டு அனுபவங்களிலும் இயேசு செய்தது போல் செபிப்போம். எமது மண்ணுக்கும் மக்களுக்கும் எப்போதும் வேதனையும் வெறுப்பும் தரும் அனுபவம் இல்லாமல் மகிழ்ச்சியும் அன்பும் தரும் அனுபவமும் கிடைக்க தொடர்ந்து செபிப்போம்.

அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை

### நாளை

மாசி 13

திங்கட்கிழமை

திதி: துதியை முன்இரவு 8-28 வரை.

நட்சத்திரம்: உத்தரம் பின் இரவு 3-49 வரை.

ராகுகாலம்: 8.00 - 9-.30

நல்லநேரம்: 12.30 - 2.00

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலிகளின் அரசியல்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படி கூட்டு முன்னணிக்கு ஆதரவாகச் செயற்படும் சக்திகள் குறித்து அதி உயர் அதிகார மட்டத்தில் சுட்டிக்காட்டிப் பேசப்பட்டதாகவும் அறிய வருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து தனது பிரதிநிதிகளை வன்னிக்கு அனுப்பி புலிகளுடன் பேச்சு நடத்தியிருந்த ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல். எவ்.) —

புலிகளின் முன்னைய அரசியல் பிரிவான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட அப்போது விருப்பம் தெரிவித்திருந்தது.

அந்த இயக்கம் தற்போது புலிகள் அமைத்துள்ள கூட்டு முன்னணி தொடர்பாக அக்கறையுடன் செயற்படுகின்றது.

புலிகளின் கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளரும் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு மிக நெருக்கமானவரும் புலிகளின் ஆஸ்தான கவிஞருமான புதுவை இரத்தினதுரை —

புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி —

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (பீகிங் சார்பு) சண்முகதாசன் பிரிவில் அரசியல் பயிற்சி பெற்றவரும் ஈரோஸ் அமைப்பின் முன்னார் தலைவருமானவே. பாலகுமாரன்-

கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் கதிரேசன் —

ஆகியோரின் பெயர்கள் புதிய கூட்டு முன்னணியுடன் இணைத்துப் பேசப்படுகின்றன.

புலிகள் பிரமுகர் அன்ரன் பாலசிங்கத்தின் பெயரும் இந்த முன்னணியுடன் இணைத்துப் பேசப்படுகிறது.

### டக்ளஸ் கருத்து

இந்தப் புதிய முன்னணி அமைக்கப்பட்டதாக வெளியான தகவல்கள் குறித்து ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்ட போது அவர் கூறியதாவது.

''எமக்கு இது குறித்து அழைப்பு ஏதும் கிடைக்கவில்லை.

''புலிகளுடன் ஈ. என். டி. எல். எவ். இணைந்து செயற்படுவது உண்மையே.

பொதுவாக தமிழ் மக்களிடையே ஐக்கியம் ஏற்பட வேண்டியது அவசியமே. தமிழ்—முஸ்லிம் ஐக்கியம் வளராதவரை எமது நிலை துர்ப்பாக்கியமானதாகவே இருக்கும்.

''தமிழர் கூட்டு முன்னணி அமைக்கும் முயற்சி நடப்பது குறித்து நானும் கேள்விப்பட்டுள்ளேன். சில தமிழ்ப் பிரமுகர்கள் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

''யார் யாருடன் சேர்வது என்பதே இப்போதுள்ள பிரச்சினையே தவிர, இணைவது என்பது அவசியமா என்பதல்ல— 'Tamil United Allaiance' என்பது அழகான பெயர். அதில் இணைந்து கொள்ள அழைப்பு வந்தபின் அதுபற்றித் தீர்மானிப்போம். ஆனால் அதற்கு முன்னர் தான் செய்த தவறுகளை புலிகளின் தலைவர் உணர்ந்து கொள்ளவேண்டும்.— என்றார்.

### பிரேமச்சந்திரன் கருத்து

இந்த விடயம் குறித்து ஈ. பி. ஆர். எல். எவ்வின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாவது:-

''இன்று இலங்கையில் இராணுவத்துடன் இணைந்து இயங்காத ஒரேயொரு மாற்று இயக்கம் ஈ. பி. ஆர். எல். எவ். மட்டுமே. ஆனால் புலிகள் எம் மீதே சகல பழிகளையும் போட்டு பிரசாரம் செய்கின்றார்கள்.

''இத்தகைய கூட்டு முன்னணியில் இணையுமாறு எமக்கு அழைப்பு வரும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. கூட்டு முன்னணி உருவாகும் சூழ்நிலை இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை.

'' உருவாகாத ஒன்றைப் பற்றி அபிப்பிராயம் கூறுவது அநாவசியமானது '' — என்றார்.

'' இத்தகைய முன்னணி ஒன்றை அமைக்கும் அளவுக்குப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முட்டாள் அல்லர் '' — என்று ஈரோஸ் பிரமுகர் சுதாகரன் கூறினார்.

— இப்படி அந்தத் தமிழ்ப் பத்திரிகை தெரிவித்தது.

இதற்கிடையில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றிய ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா —

'' சகோதரப் படுகொலைகளை நிறுத்தி ஒரே குரலில் செயற்படத் தயார் என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிவித்தால் புரையோடியிருக்கும் இனப் பிரச்சினைக்கு ஆறு மாத காலத்தில் என்னால் தீர்வு காண முடியும். ஜனநாயக அரசியலில் ஈடுபடத் தயார் என பிரபாகரன் அறிவித்தால், அரசியலிலிருந்து விலகுவதற்கும் நான் தயார் '' — என்று கூறினார். (உ-150)

## கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமூக, சமயத் தலைவர்கள் புலிகளின் பிரமுகர்களுடன் பேசவிரும்புவதாகத் தெரிகின்றது.

புலிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியை முஸ்லிம் பிரமுகர்கள் நாடியுள்ளனர்.

புலிகளைச் சந்திக்கச் செல்லும் முஸ்லிம் பிரமுகர் குழுவுடன் கிழக்கில் உள்ள சில பத்திரிகையாளர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரியவந்தது.

## பிடித்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கு முக்கியமான பகுதி எனக் கருதப்படுகிறது.

வவுனியா - மன்னார் வீதி விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு வசதிகள் உருவாகியுள்ளன. இராணுவத்தினருக்கான விநியோகங்களை வவுனியாவிலிருந்து மன்னாருக்குத் தரைவழியாகக் கொண்டு செல்லலாம்.

அதே போல் மன்னார்ப் பகுதியில் பிடிக்கப்படும் கடலுணவுகள் மற்றும் விவசாய உற்பத்திகளைத் தென்பகுதிக்குக் கொண்டு செல்ல முடியும்.

மடுக்கோயிலுக்கு யாத்திரை செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்கள் வவுனியா வந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு முன்னரிலும் பார்க்க இலகுவாகச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மன்னார் - வவுனியா தரை வழிப் பாதையின் பாதுகாப்பு நிலை குறித்து தற்போது எதுவும் கூற முடியாதுள்ளது. நிலைமையை சுமார் ஒன்று அல்லது இரண்டு மாதங்களில் அவதானிக்க முடியும்.

இப்படி அவர் கூறினார்.

## தனியாரிடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு ஏற்பட்டுள்ள பெரும் நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே தனியார் கப்பல் சேவையைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாம்.

இதற்கு அரச உயர் மட்டத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஜே. வி. பி. வேட்பாளர் குறித்த தகவல்கள்

## பொலீஸார் சேகரிக்கின்றனர்

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தங்கள் வேட்பாளர்களுக்குத் தொல்லை கொடுக்கும் நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டுள்ளார்கள் என்று ஜே. வி. பி. அறிக்கை ஒன்றில் குற்றஞ் சாட்டியது.

ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் இது சம்பந்தமான கடிதம் ஒன்றைப் பொலீஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ளார்.

தங்கள் வேட்பாளர்கள் பற்றிய தகவல்களைப் பொலீஸார் சேகரித்து வருவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகரகம, மாத்தறை, குருநாகல் ஆகிய இடங்களிலுள்ள பொலீஸ் உத்தியோகத்தர்கள் இத்தகைய தகவல்களைச் சேகரித்து வருவதாகவும் —

ஒரு தேர்தலில் போட்டியிடும் குறிப்பிட்ட ஒரு கட்சியின் வேட்பாளர்களின் தகவல்களைச் சேகரிப்பது சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல் ஒன்றின் அடிப்படை விதிகளை மீறும் செயலாகும் என்றும் —

இந்த நடவடிக்கையை உடன் நிறுத்துமாறும் — பொலீஸ் மா அதிபரிடம் ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

(இ- 5)

# வேலையில்லாத் திண்டாட்டம் ரஷ்யாவில் அதிகரிப்பு!

## வன் செயலில் இளைஞர்கள்

மொஸ்கோ, பெப். 23

ரஷ்யாவில் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டமும், அதனால் மக்கள் மத்தியில் ஏற்படும் சலிப்புணர்வும் வன்முறைச் சம்பவங்களாக உருவெடுத்து வருகின்றன.

இதன் வெளிப்பாடாக கடந்த புதனன்று ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 23 வயதுடைய மேற்றல் ஷேக் என்ற வேலையில்லாத இளைஞன் மொஸ்கோவின் குடியிருப்புப் பகுதி ஒன்றுக்குள் திடீரெனப் புகுந்து பித்துப் பிடித்த நிலையில் மூன்று பேரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தான். ஒரு வயதுக் குழந்தை ஒன்றையும் குத்திக் காயப்படுத்தினான்.

தொடர்ந்தும் அவன் ஆட்களைத் தேடி ஓடி கொலை முயற்சியில் ஈடுபட்டபோது பொலீஸார் அவனை மடக்கிப் பிடித்தனர். (ஐ-10)

### கொமோறோ தீவுக்கு அருகே

# விமான விபத்தில் பலியான தமிழர்களுக்கு நட்ட ஈடு!

## விவரங்களை அனுப்ப கோரிக்கை

லண்டன், பெப். 23

கொமோறோ தீவுக்கு அருகே கடந்த நவம்பரில் இடம் பெற்ற கடத்தல் விமான விபத்தில் பலியான ஒன்பது ஈழத்தமிழர்களுக்குரிய காப்புறுதிப் பணத்தைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு ஈடுபட்டுள்ளது.

பலியான ஒன்பது பேரில் இருவரின் உறவினர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்குரிய காப்புறுதிப் பணத்தை சம்பந்தப்பட்ட எதியோப்பிய விமானக் கம்பனியிடம் இருந்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும்—

பலியான அனைவரினதும் உறவினர்கள் சார்பில் மனு ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டி இருப்பதால் பலியானோரின் நெருங்கிய உறவினர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அகதிகள் நடவடிக்கைக் குழு தெரிவித்துள்ளது.

தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழுவுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Co-ordinator Tamil Refugee Action Group
III High Holborn London
We IV 6 JS.

(ஐ)

## வவுனியா - மன்னார்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது கட்ட நடவடிக்கையின் போது படையினர் மடுச் சந்தியைக் கைப்பற்றி அங்கிருந்து மேலும் முன்னேறி மன்னாரிலிருந்து புறப்பட்டு வந்த படையினருடன் இணைந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

### ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்வு

இந்த இராணுவ நடவடிக்கையின்போது மக்கள் பெருமளவு இடம் பெயர்ந்துள்ளனர்.

வவுனியா—மன்னார் வீதி வழியாக படையினர் முன்னேறிச் சென்ற பகுதியில் வசித்துவந்த மக்களும் —

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணிப் பகுதியில் வசித்துவந்த மக்களுமே இடம்பெயர்ந்துள்ளனர்.

வவுனியா அரசாங்க அதிபர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இடம் பெயர்ந்து வரும் மக்களைப் பராமரிப்பதில் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்றார்.

தாண்டிக்குளத்தினூடாக வவுனியாவுக்கு வருவோர்—

மன்னாரில் இருந்து வவுனியா வருவோர் —

வவுனியா செயலகப்பிரிவைச் சேர்ந்த வீரங்குளம், சாஸ்திரியாகுளம், புதுக்குளம், ஓமந்தை, இளமருதங்குளம், மகிழங்குளம் போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்தோர் — ஆகியோரைப் பராமரிப்பதற்கு போதிய முகாம் வசதிஇல்லை என்று அவர் கூறினார்.

இதேவேளை — நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மருதோடை, பச்சிலைமடு போன்ற எல்லைப்புறமக்களில் 937 குடும்பங்களைச் சேர்ந்த 3995பேர் இடம் பெயர்ந்துள்ளனர். (இ-10)


RADIO & ELECTRONICS

புதிய வகுப்புக்கள்

01 - 03 - 1997

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE,
2 nd Cross Street,
Jaffna.

(45459)

SHORT HAND & TYPING

தமிழ் & ஆங்கிலம்

புதிய வகுப்புக்கள்

05 - 03 - 1997

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE,
2nd Cross Street,
Jaffna.

(45460)

நெசவாளர் தேவை

துண்டுச் சம்பள அடிப்படையில் கைத்தறி/மின்தறிகளில் நெசவு செய்யக் கூடியவர்கள் உடன் தேவை. பயிலுநர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர். பயிலுநர்களுக்கு ஓராண்டுப் பயிற்சியின் பின் தகைமையுளவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்சிச் சபை வழங்கப்படும் சான்றிதழ் பெறுவதற்கும் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இரு பாலாரும் எமது சங்கத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் -
கூட்டுறவுச் சங்கம்.

இருபாலை வீதி,
கோண்டாவில். (9311)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டடினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23 - 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org